அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research



# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola's Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# தமிழ்

# வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்

## *Akananuru scenes in the novel Velpari*

***Author:R. Krishnaveni, (Reg.No.: BDU2010632778749 Dt. 7.12.2020)***
*Full-time Postdoctoral Researcher*
***Guide: Dr S. Sudha,***
*Associate Professor, Department of Tamil Studies,*
*Government Arts College (Autonomous)*
*Karur.*

***Abstract***

*Sangam literature has always been a historical treasure trove for understanding the Tamil tradition of ancient people. In the modern world, where countless stories and poems are being created based on the basic concepts and words of Sangam literature, the novel genre, which has taken root in a unique place in the contemporary literary genre, is still spreading its fragrance. The author, who has extracted the essence of Sangam literature and used an alchemy, begins to write a novel called "Veera Yuga Nayagan Velpaari" based on countless news ideas from literature. The purpose of this article is to study and conclude how many news from the Agana Nooru book alone has been used in the novel.*

***Keywords: Velpari, Akananuru, Scenes, Novels, Sangam Literature***

***கட்டுரையாளர்: ர.கிருஷ்ணவேணி, (Reg.No.: BDU2010632778749 Dt. 7.12.2020)***
*முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்*
***நெறியாளர்: முனைவர் சா.சுதா,***
*இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)*
*கரூர்.*

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியம் தொன்றுதொட்டு பண்டைய மக்களின் தமிழ் மரபை அறிந்துக்கொள்ளக்கூடிய வரலாற்றுப் பேழையாக இருக்கின்றது. சங்க இலக்கிய அடிக்கருத்துக்களையும், சொற்களையும் அடிமுதலாகக் கொண்டு இந்நவீன கால உலகில் கதைகளும், கவிதைகளுமான படைப்பாக்கங்கள் எண்ணற்ற அளவில் உருவாகிக்கொண்டு வரும் சூழலில், தற்கால இலக்கிய வகைமையில் தனக்கென தனித்ததொரு இடத்தை நீங்காமல் வேரூன்றிப் பிடித்திருக்கும் புதின வகையிலும் இன்னும் மணம் பரப்பிக்கிடக்கிறது. சங்க இலக்கியத்தின் சாரத்தை பிழிந்து ஒரு இரசவாதத்தை கையாண்ட ஆசிரியர் இலக்கியத்திலிருந்து எண்ணற்ற செய்திக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து வீரயுக நாயகன் வேள்பாரி என்ற புதினம் ஒன்றை எழுதத் தொடங்குகிறார். இவற்றில் அகநானூறு நூலிலிருந்து மட்டும் எத்தனை செய்திகளை புதினத்துள் பயன்படுத்தியிருக்கிறார் என்பதை ஆய்ந்து முடிவு தருதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** வேள்பாரி, அகநானூறு,காட்சிகள், புதினம், சங்க இலக்கியம்

**முன்னுரை**

சங்க இலக்கியமானது, காலம் கடந்து இன்றளவிலும் மொழியின் தாய்மைத்தன்மையாக வைத்துப் போற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஓர் மாபெரும் களமாகும். இதனை அடியொற்றி எண்ணற்ற கட்டுரைகள், கவிதைகள், கதைகள் உருபெற்றுள்ளன. அதற்குரிய காரணம், அடிப்படை சாராம்சமாக விளங்கும் பண்டையநாகரிகத்தை அழகாகக் காட்டும் சமுத்திரமாக இது விளங்குதலே. சங்க இலக்கிய வரி ஒன்றை மட்டும் எடுத்துக்கொண்டு அறிஞர்கள் பல படைப்புகளை உருவாக்கியுள்ளனர். சங்க இலக்கிய கொள்கைகளுள் ஒன்று தலைவன் தலைவி பெயர் குறிக்காமையாகும். கொள்கைக்குள் வைத்து சங்க இலக்கியத்தைப் பொருத்திப் பார்த்துக்கொண்டிருந்த இலக்கிய உலகுக்கு, சங்க இலக்கிய காட்சிகளை அடிப்படையாக வைத்து, அதற்கு வண்ணஓவியம் தீட்டி, உருவம் மட்டுமின்றி கதைமாந்தர்களுக்கு பெயரமைத்து வேள்பாரி எனும் புதினமாக ஆசிரியர் சு.வெங்கடேசன் உருவாக்கியுள்ளார். புதினத்தில் சங்க இலக்கியம், மற்றும் சித்த மருத்துவ அகராதி, கஜசாஸ்திரம் என பழைமையான நூல்களின் செய்திகளை கையாண்டுள்ளார். சங்க இலக்கிய வரிசைகளுள் ஒன்றான அகநானூற்றிலிருந்து அவர் கையாண்ட காட்சிகளை கண்டறிந்து கொணர்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சங்க இலக்கியமும் வேள்பாரியும்**

சங்கஇலக்கியத்துள் மாபெரும் வள்ளலாக பரிந்துரைக்கப்படுகிற வள்ளல் பாரி என்போனே சு.வெங்கடேசனின் எழுதிய வேள்பாரி நாவலின் நாயகனாக விளங்குகிறான். இவனை மையமிட்டு இவர் இந்நாவல் இயம்பப்படகாரணம், காலம் கடந்து பேசுபொருளாக உள்ள இவன்பெயரும், முல்லைக்குத் தேர் கொடுத்தான் என சொல்லக்கூடிய அவ்வொற்றை வரியுமே. சங்க இலக்கியத்துள் பாரி பேசப்படக்கூடிய இடங்களில் உடன் அதிகம் அவனோடு பயணிக்ககூடியவராக கபிலர் எனும் புலவரும் இடம்பெறுவார். இந்நாவலிலும் இவரது பங்கு அளப்பரியது. இவர்களை மையமாகக்கொண்டு வீரயுகநாயகன் வேள்பாரி புதினம் புனையப்பட்டுள்ளது. சங்கப்பாடல்கள் காதல் காட்சிகளை மட்டுமின்றி நிலம்சார்ந்தும் கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் சார்ந்தும் பேசுகிறது. இவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட களம் தான் வேள்பாரி நாவல்.

**வயல் நண்டும் பாண்டியனும்**

வேள்பாரி நாவலில் இடம்பெறும் நீலன் என்போனின் கதாபாத்திரம் வாசகர் வட்டத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. நீலனுக்கும் புலவர் கபிலருக்கும் மாபெரும் உரையாடல் நிகழ்கிறது. பாண்டியனுக்குரிய பூ வேப்பம்பூ என கபிலர் குறிப்பிடுகிறார். அதற்கு மறுமொழியாக நீலன், வயல்நண்டின் கண்கள் வேப்பம்பூ போலத்தான் இருக்கும் .உங்கள் மன்னன் நண்டையா மாலையாக அணிந்துள்ளான் என சிரிக்கிறான். இக்காட்சியில் இடம்பெற்றுள்ள நண்டு குறித்த செய்தி அகநானூற்றில் இடம்பெறுகிறது.

**வேப்புநனை யன்ன நெடுங்க ணீர்ஞெண்**

**டிரைதேர் வெண்குரு கஞ்சி அயலது** [1]

இதன் பொருளானது பறவைகள் ஒலி எழுப்புகின்ற வயலில் உள்ள வேம்பின் அரும்பினைப் போன்ற நீண்ட கண்களைக் கொண்ட நண்டு என்பதாம். இக்காட்சியானது பாண்டியனுக்கு பொருத்திப்பார்க்கப்பட்டுள்ளது.

**பன்றியும் கிழங்கும்**

குறிஞ்சி நிலத்தில் நிகழும் மற்றொரு காட்சி ,வயிரம் போல உறுதியான கொம்பினையுடைய பன்றியானது சுனைநீரை பருகிவிட்டு அகன்ற இலையையுடைய சேம்புக்

கிழங்கை தின்றது என்பதாம். இந்நிகழ்ச்சியை பாரியின் பறம்பு மலையான குறிஞ்சி நிலத்தில் நிகழ்வது போல ஒரிடத்தில் ஆசிரியர் சு.வெங்கடேசன் காட்சியமைத்துள்ளார்.

கிழங்குகளை மண் கிளறி மேய்ந்து கொண்டிருந்த பன்றிக்கூட்டம் இப்பொழுது அவ்விடம் இல்லை. சேமக்கிழவி அருகில் போய்ப் பார்த்திருக்கிறாள். மண்ணுக்குள் கிழங்கு வடிவத்தில் ஏதோ இருந்திருக்கிறது.[2]

அகநானூறும் இக்காட்சியை எடுத்துரைக்கிறது.

**வயிரத் தன்ன வையேந்து மருப்பின்**

**வெதிர்வே ரன்ன பரூஉமயிர்ப் பன்றி**

**பறைக்க ணன்ன நிறைச்சுனை பருகி**

**நீலத் தன்ன வகலிலைச் சேம்பின்**

**பிண்ட மன்ன கொழுங்கிழங்கு ….** [3]

**விருந்தோம்பல்**

மானுடர்களின் உயர்ந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படும் விருந்தோம்பலானது ,சங்க இலக்கியமெங்கும் ஒரு சடங்கு போல பரவிக்கிடக்கிறது. தங்கள் குலச்சமூகத்தைக் காண வந்துள்ள பாரிக்கு, மேழகன் செங்காற் சேவலடித்து விருந்து வைத்தான் எனும் காட்சி இடம்பெற்றுள்ளது.

நான் நினைத்ததைவிட இளைஞனாகவும் மாவீரனுக்குரிய உடல்தகுதியோடும் பாரி இருக்கின்றான் என்று மேழகன் புகழ்மாலை சூடியபடியிருந்தான். வரவேற்பும் விருந்துமாக பின்வந்த நாட்கள் கழிந்தன. செங்காற் சேவலடித்து மேழகன் தொடர்ந்து விருந்து வைத்தான்.

**“மனையுறை புறவின் செங்காற் சேவ”** [5]

செங்கால் சேவலானது சிவந்த அடியினையுடையது என்ற குறிப்பானது அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது

**கள் அருந்தும் மகளிர்**

கள் என்பது குலச்சமூகத்தில் இடம்பெறும் இன்றியமையாத ஒரு பகுதியாகும். இக்கள்ளானது தாம் வாழும் பகுதியில் அதிகம் கிடைக்கின்ற பழங்களைக் கொண்டு அக்குடி மக்களால் தயாரிக்கக்கூடிய ஒன்றாகும்.இது ஆதிக்குடிகளின் உணர்வு சார்ந்த ஒரு சடங்காக போற்றப்படுகிறது. குலச்சமூகத்தில் விழா என்றால் இன்றியமையாத இரண்டனுள் ஒன்று

கள்ளும், நடனமும் ஆகும். இவ்வகையான கள்ளைப் பருகிவிட்டு ஆண்களும் பெண்களும் ஒன்றாய் கூடி கூத்தாடுதல் ஆதிக்குடிகளின் பழக்கமாகும். ஆண்களின்றி மகளிர் தனியே கூடி கள் அருந்தி கூத்தாடியுள்ளனர் என்ற காட்சி அகநானூற்றில் இடம்பெற்றுள்ளது. இதனை சு.வெங்கடேசன் புதினத்தில் ஒரு காட்சியாக்கியுள்ளார். அகநானூற்றில் இடம்பெறும் காட்சி,

நீர்நாயானது வாளைமீனோடு சண்டையிட்ட காரணத்தால் நீர்த்துறை கலங்கிக்கிடக்க ,அவற்றைக் கண்ட அழகிய வேலைப்பாடமைந்த குடத்தைக் கொண்டு வந்த பெண்கள் நீர் தெளியட்டும் என காஞ்சிமரத்தடியில் தெளிந்த கள்ளினைக்குடித்துத் குரவைக்கூத்து நிகழ்த்தினர்.

**வாளையொ டுழப்பத் துறைகலுழ்ந் தமையிற்**

**றெண்கட் தேறல் மாந்தி மகளிர்**

**நுண்செய லங்குட மிரீஇப் பண்பின்**

**மகிழ்நன் பரத்தைமை பாடிய வீழிணர்க்**

**காஞ்சி நீழற் குரவை யயருந்•••**[6]

அகநானூறு நித்திலக்கோவையுள் இடம்பெற்றுள்ள இப்பாடலின் கள் அருந்தும் காட்சி வேள்பாரி புதினத்தில் பின்வருமாறு அமைகிறது.

வள்ளிகானத்தின் கொண்டாட்டத்தில் பெண்கள் மது உண்டு களிக்கின்றனர்.[7]

பாரியின் மனைவியாக சித்தரிக்கப்பட்டுள்ள ஆதினி என்போளின் தலைமையில் மயிலா என்பவளுக்கு நிறைசூல் விழா நிகழ்கிறது. அவ்விழாவில் பெண்கள் மட்டும் கலந்து கொண்டு மரத்தடியில் அமர்ந்து ஆண்களால் அறிந்து கொள்ள முடியாதவாறு தயாரிக்கப்பட்ட கள்ளைக் குடித்து மகிழ்வடைந்தனர் என்றபடி நாவலாசிரியர் காட்சியமைத்துள்ளார்.

**வள்ளல் பாரியின் காதலும் நாகத்தின் கூடலும்**

சங்க இலக்கியத்துள் காதல்காட்சி நிகழும் களமானது இயற்கைப்புணர்ச்சி முறையில் நிகழ்கிறது. காதல் கொள்ளும் தலைவனும் தலைவியும் இயற்கையோடு இணைந்துகூடி முயங்கியுள்ளனர். இவர்களின் கூடலுக்கு சாட்சியாக விளங்கிய கருப்பொருட்கள், தலைவனை கடிந்துரைக்கும் தலைவிக்கு சாட்சியாகவும் அமைகின்றன. இதுபோன்ற சாட்சிகள் இலக்கியத்துள் இடம்பெற்றுள்ளன. தலைவி ஒருத்தி, வருவதாகச் சொல்லிச்சென்ற தலைவன் இன்னும் வரவில்லை என புலம்புமிடத்து ,தலைவன் தன்னோடு கூடலை மேற்கொண்ட பொழுது வேறெவருமில்லை ஒரு குருகு மட்டுமே சாட்சியாக இருந்தது என்பாள். இதுபோல

துன்பத்தை வெளிப்படுத்தும் சூழலியல் மட்டுமின்றி இன்பத்தை பகிரும் இடமாகவும் இதுபோன்ற காட்சிகள் அமைந்துள்ளன. தலைவனும் தலைவியும் குகை ஒன்றில் கூடும்பொழுது அவர்களின் கூடலுக்கு, நாகத்தின் தலையிலிருந்து வெளிபட்ட ஒளியில் கூடலை நிகழ்த்தினர் என்ற காட்சி அகநானூற்றில் வரும். இதுபோன்ற காட்சியினை ஆசிரியர் புதினத்தில் கையாண்டுள்ளார். பாரியும் அவனது மனைவி ஆதினியும் கூடி முயங்க பாம்பின் தலையிலிருந்து வெளிபட்ட ஒளி உதவியது என்பார்.

குகையின் உள்ளடுக்கிலிருந்து சிற்றொளி வெளிப்பட்டது. அதை உணர்ந்த கணம், சட்டெனக் குகையின் உட்பகுதியை நோக்கித் திரும்பினான் பாரி. தோளிலே சாய்ந்திருந்த ஆதினி திடுக்கிட்டு நடுங்கினாள். உள்ளே இருப்பது விலங்கா…எந்த வகையான விலங்கு? எதையும் கணிக்க முடியவில்லை. ஒளியின் அளவு கூடிக்கொண்டே இருப்பதுபோல் தெரிந்தது.

அச்சம் நீங்காத குரலில் பாரியின் கைகளை இழுத்து அணைத்தபடி, ''என்னஅது? சொல் !'' என்றாள். [8]

இதுதான் ஒளி உமிழும் வெண்சாரை. நாகர்குடியின் குலதெய்வம். இதைப் பார்த்தவர்கள் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வார்கள் என்று நாகர்கள் நம்புகிறார்கள். [9]

ஒளி உமிழும் இருவெண்கோடுகலும் ஒன்றாகச் சந்தித்தன. சிறிது நேரத்தில் ஒன்றை ஒன்று சுற்றிப் பின்னத் தொடங்கின. காற்றுக்கு அசையும் சுடரொலிபோல வெண்ணொளி கூடிக் குறைந்து கொண்டிருந்தது. [10]

ஆதினியின் கால்களில் அணிந்திருந்த தண்டை இவ்வளவு ஓசையை எழுப்பியபோதும் பின்னிய நாகங்கள் விலகவில்லை. நாகங்களும் விலகவில்லை, நாகங்கண்டும் விலகவில்லை [11]

**அகநானூற்றில் இடம்பெறும் காட்சி**

**"உருமுச் சிவந்து எறிந்த உரன் அழி பாம்பின்**

**திருமணி விளக்கின் பெறுகுவை-**

**இருள் மென் கூந்தல் ஏமுறு துயிலே"[12]**

இடி ஓசையால் தனது வலிமை இழந்த பாம்பினது அழகிய தலைமணியாகிய விளக்கொளியில் ,தலைவியின் இருண்ட மெல்லிய கூந்தலிடத்து இன்பத்தை தரும் துயில் கொள் என தோழி தலைவனிடம் வற்புறுத்தும் காட்சி அமைந்துள்ளது.

**செம்மூதாய்**

வேள்பாரி புதினத்தில் குலச்சமூகங்ககள் அழிக்கப்பட்ட வரலாறுகள் இயம்பப்பட்டுள்ளன. அவற்றுள் அகுதை என்போனின் கூடல் நகரம் அழிக்கப்பட்டபோது ,அழிக்கப்பட்ட காட்டருகே செம்மூதாய் ஒன்று நகர்ந்து சென்றதாக குறிப்பிட்டிருப்பார். செம்மூதாயானது இலக்கியத்துள் இந்திரகோபப்பூச்சி என உரையாசிரியர்களால் அழைக்கப்படுகிறது.

**“காயாஞ் செம்மல் தாஅய்,பல உடன்**

**ஈயல் மூதாய் வரிப்ப...”[13]**

வேள்பாரியுள்செம்மூதாய் குறிப்பிட்டுஇடம்பெற்ற வரி,

“தரையில் அழகிய செம்மூதாய் ஒன்று நகர்ந்துகொண்டிருந்தது”[14]

**வேளிரும் பாழியும்**

வேளிர்கள் தாங்கள் சேர்த்து வைத்த செல்வங்களை பாழி எனும் நகரில் பாதுகாத்து வைத்துள்ளனர் இப்பாழி நகரானது நன்னன் என்போனால் உருவாக்கப்பட்டது. என்கிறது அகநானூறு.

**“நன்னன் உதியன் அருங்கடிப் பாழி”[15]**

**“அணங்குடை வரைப்பின் ,பாழி ஆங்கண்,**

**வேள்முது மாக்கள் வியல்நகர்க் கரந்த**

**அருங்கல வெறுக்கையின் அரியோன் பண்புநினைந்து”[16]**

“பாரி சொன்னான்,அந்தப் பக்கம் இரு குன்றுகளுக்குப் பின்னால்தான் பாழிநகர் இருக்கிறது, என்று கூறிய பாரியிடம் கபிலர்,

“பாழி நகரில்தான் வேளிர்கள் செல்வங்களை எல்லாம் பாதுகாத்து வைத்துள்ளனர் என்று கேள்விப்பட்டுள்ளேன். அங்குதான் இருக்கிறதா பாழி நகர்?”

கபிலரின் கேள்விகண்டு புன்னகைத்தான் பாரி”.[17]

இதன் வழி பாழி எனும் நகர் பண்டைய காலத்தில் மலைநிலத்தை ஆண்ட வேளிர்களால் முறையாக பாதுகாக்கப்பட்டதை உணர முடிகிறது. பாழி பற்றிய மேம்போக்கான குறிப்பு மட்டும் அகநானூற்றில் இடம்பெறுகிறது. செல்வத்தை சேமிக்கும் இடமாக அதனை

14வேளிர் பாழியைப் பயன்படுத்தினர் எனும் செய்தி சங்க இலக்கிய மற்ற நூல்களில் இடம்பெறுகிறது.

**பேரியாறும் வாணிபமும்**

எண்ணற்ற குலங்களை அழித்த அரசுகள் தங்களுக்கென தனிநாடு அமைத்துக்கொண்டனர். அவர்களின் ஆட்சிப்பரப்பில் காவிரி, வைகை, பேரியாறு போன்ற ஆறுகள் அமைந்தன. மலையில் பிறந்து கடலின் கரையினைக் கரைத்திடும் காவிரிப் பேரியாறு, விரைந்து செல்லும் நீர்பெருக்கினையுடையது.

இதனை அகநானூறு,

**"கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாறு "**[18]

என்கிறது.

''காவிரி, வைகை, பேரியாறு என ஆற்றங்கரைகளில் மூவேந்தர்களின் நாடுகள் அமைந்தன''.[19]

மேலும் பேரியாறு சேரனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்ததை அகம் இவ்வாறு பதிவு செய்கிறது.

**……………………..சேரலர்**

**சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க,………**

**யவனர் தந்த வினைமாண் நன்கலம்**

**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்** [20]

சுள்ளி என்னும் பெயர்கொண்ட பேரியாறு சேர அரசர்க்கு உரித்தானது என்கிறது. அதுமட்டுமின்றி யவனர்களால் சேர நாட்டின் மிளகானது பண்டமாற்று செய்யப்பட்டது எனும் தகவலும் கிடைக்கிறது. இதனை வேள்பாரி புதினத்துள்ளும் ஆசிரியர் புகுத்தியுள்ளார்.

எறிந்த வேல்போல் காட்டம் உள்குத்தி நிற்கும் ஆற்றல் யவனத் தேறலுக்கு உண்டு. அதனை முதலில் அருந்தி மகிழ்ந்தவன் சேரந்தான். மிளகுக்கு ஈடாகக் கொண்டுவந்து இறக்கப்பட்ட அதிசிறந்த பொருள் அதுதான்[21]

**வேடர்குலம் கொடிக்குலம்**

கானவன் என்போரை இலக்கியம் வேடர் எனும் சொல்லாலும் ஆள்கிறது. குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த வேடனான முருகனும், கொடிச்சி குலத்தவளான வள்ளியும் காதலர்கள் எனும் கதையானது மக்களிடத்தில் பேசுபொருளாக உள்ளது. இது காதலை மட்டும் பறைசாட்டுவது அன்றி இரு குலத்தின் இணைவை காட்டுகிறது.

இது குறித்தும் நாவலாசிரியர் பதிவிட்டுள்ளார். முருகனும் வள்ளியும் காதல் கொள்வதை இரு சமூகத்தாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதால் உடன்போக்கு மேற்கொள்கின்றனர். முருகனின் நண்பனான எவ்வியிடம் வள்ளி குறித்து இவ்வாறு உரையாடுகிறான்.

"இவர்கள் கொடிக்குலம். நாமோ வேடர் குலம். எப்படி ஏற்றுக் கொள்வார்கள்?"[22]

முருகனுக்குப் பிறகு ,குலத்தலைவன் ஆனான் எவ்வி. கொடிக்குலமும் வேடர்குலமும் இணைந்தன.[23]

அகநானூறானது,

**"... ஓங்கு திணைப் பெரும் புனத்துக்**

**கழுதில்,கானவன் பிழி மகிழ்ந்து வதிந்தென:**

**ஒலியல் வார் மயிர் உளரினள்,கொடிச்சி**

**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட"[24]**

சிங்கம் போன்ற வலிமையுடைய கானவன் திணைப்புனத்தில் காவலிருந்தான். அவள் மனைவி கொடிச்சி குறிஞ்சிப் பாடலை பாடிக்கொண்டிருந்தாள் என்கிறது. கானவன் என்போன் திணைப்புனம் காக்கும் வேடராவான். கொடிச்சி என்பவள் செடி,கொடிகளின் தாயாதியாக விளங்குப்பவள். வெவ்வேறு ஒழுக்கத்திற்குரிய இரு குலத்தோரின் இணைவை இப்பாடல் காட்டுகிறது.

**நாழிகைவட்டில்**

**"நிலனும் விசும்பும் நீர் இயைந்து ஒன்றி,**

**குறுநீர்க் கன்னல் எண்ணுநர்"[25]**

கன்னல் என்பது நாழிகை வட்டில். சிறிய கலத்தின் அடியில் நீரோ, மண்ணோ நிரப்பி துளைவழி வெளிவரும் நீரைக் கொண்டு கோடுகள் வரையப்பட்டு நாழிகை அறிந்து கொள்ளும் வழக்கம் இருந்துள்ளது. இதை அகநானூறு பதிவு செய்கிறது. கன்னல் குறித்த பதிவும் வேள்பாரி

நாவலில் காட்டப்பட்டுள்ளது. பறம்புநாட்டுக்கும், மூவேந்தர்களுக்குமிடையே நிகழும் போரில், இவர்களுக்கு நடுவுநிலைமை வகிக்கும் திசைவேழர் என்பவரால் இக்கன்னல் அறிமுகமாகிறது. போரில் கன்னல் நேரத்தை அளவிடும் கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இடம் கோபுரப் பரண் அமைக்கப்பட்டு அதன் மேல் நாழிகைத்தட்டு வைக்கப்படும். ஒவ்வொரு நாளும் பகல் ஐந்தாம் நாழிகைத் தொடங்கும்போது போர் தொடங்க முரசறைவோம். [26]

மூவேந்தருக்கும் பறம்புக்கும் இடையில் நிகழும் போரில் அறத்தை கடைபிடிக்க போர்களத்தில் நாழிகை வட்டில் வைக்கப்படுகிறது. இது போரிடும் காலத்தினை குறிப்பதற்காக மட்டுமின்றி,குறிப்பிட்ட நாழிகையை தாண்டி தவறுகள் நிகழ்ந்திராத வண்ணம் இருக்க நாழிகை வட்டில் அவசியமாதலால் இவ்வுத்தி களத்துள் பயன்படுத்தப்பட்டுள்ளது .இவை புதினம் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**மகுளி**

தங்கள் குலங்களை எவ்வாறு மற்ற குலத்தலைவர்கள் சூறையாடியனர் எனும் கதையை விளங்கும்போது அந்த குலத்தின் பாணன் தங்களுக்குரிய இசைக்கருவியை மீட்டி, தங்கள் குலம் அழிக்கப்பட்ட நிகழ்வை கூறி நடனமிடுவர். வேள்பாரி புதினத்தில் மகுளி எனும் இசையானது நாகர் குல மக்களின் குலக்கதை பேசப்படும் இடத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது.

மகுளி ப் பறை இசைக்கும் ஓசை கேட்டது.இன்று நாகர்களின் விருப்பநாள். [27]

**உருள் துடி மகுளியின் பொருள் தெரிந்து இசைக்கும்”**[28]

அகநானூற்றில் மகுளியின் ஒசையானது பேராந்தையின் குரலுக்கு ஒப்புகை செய்யபட்டுள்ளது. இவற்றுள் மகுளி என்பதற்கு இசை என விளக்கம் கொடுக்கப்படுகிறது

**குல அடையாளம்**

சங்க இலக்கிய மகளிர் உடல்நலம் பேணுதலில் அதிகளவு அக்கறை காட்டியுள்ளனர். கூந்தலுக்காக எண்ணற்ற நறுமணப் பொருட்கள் பயன்படுத்தியுள்ளனர். கூந்தலின் அழகினைப் பேணிய மகளிர் அதனை ஐவகை விதமான முறையில் வகுத்தும் உள்ளனர் எனும் செய்திகள் அகநானூறு மட்டுமின்றி சங்க இலக்கியத்தில் அதிக இடங்களில் காணப்படுகின்றன.

**“ஐவகைக் வகுத்த கூந்தல் ஆய் நுதல்”**[29]

வேள்பாரி புதினத்தில் ஐவகை கூந்தல் குறித்தும் காட்சி இடம்பெறுகிறது. குலச்சமூக மக்கள் மற்ற குலங்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்ட கூந்தல் பகுப்பு முறையை கையாண்டதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களின் தலைமுடியைக் குலத்துக்கு ஒருவகையென ஐந்து வகைகளாகப் பின்னிக்கொள்வது என முடிவு எடுத்தனர். [30]

**ஊரின் பழைய ஆண்**

புதினத்துள் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்கள் பெயர்கள் கூட சங்க இலக்கியங்களிலிருத்தும், சித்த மருத்துவ பேரகராதியிலிருந்தும் கையாண்டுள்ளார். இக்கதைமாந்தர்களுக்குரிய வரலாறு ரீதியான நிகழ்வையும் காட்சிப்படுத்தியுள்ளார். ஊரின் பழைய ஆண் மகனை பழையன் என அழைப்பர் என நாவலாசிரியர் குறிப்பிட்டிருப்பார். அகநானூறு மூலம் பழையன் என்போன் மோகூரின் தலைவனாக இருந்துள்ளான் என காட்டப்பட்டுள்ளான்.

**"பருந்து படப் பண்ணி,பழையன் பட்டென,…"**[31]

**"பழையன் ஓக்கிய வேல்போற்,பிழையல கண்ணவள் நோக்கியோர் திறத்தே** [32]

இதனை வேள்பாரியுள் இவ்வாறு பயன்படுத்தியுள்ளார்.

ஊரின் பழைய ஆணைப் பழையன் என்றும் ,பெண்ணைப் பழைச்சி என்றும் அழைப்பது வழக்கம்.[33]

**முடிவுரை**

சங்க இலக்கியத்தின் மீதான அதீத தாக்கமே வேள்பாரி புதினம் உருவாக காரணமாம். இது அடிக்கருத்தால் உருவானது என இலக்கியம் ஒப்புகொள்கிறது. ஒரு படைப்பு பண்டைய இலக்கியத்தின் மீதான மதிப்பை கூட்டச் செய்ததென்றால் அது சு.வெங்கடேசனின் இப்படைப்பாகும். சங்க இலக்கியத்துள் உலவும் நபர்களுக்கு பெயரமைத்து நடக்கவைத்திருந்தால் எப்படி இருக்கும் என எண்ணும் உணர்வுகளுக்கு மதிப்பு தருதல் போல இந்நாவல் விளங்குகிறது. வரலாறு சார்ந்த சங்க இலக்கிய நிகழ்வுகளையும் எடுத்தியம்புகிறது. அவ்வகையில் அகநானூற்றிலிருந்து அவர் கையாண்ட காட்சிகளை எடுத்தியம்பியுள்ளோம்.

**சான்றெண் குறிப்புகள்**

*1.அகநானூறு, முனைவர் இரா.செயபால், மணிமிடைப்பவளம் பா.எ. 176 பா.வரி 8,9*

*2.வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 2, பக்-27*

*3. அகநானூறு, முனைவர் இரா.செயபால், மணிமிடைப்பவளம் பா.எ. 178*

*4. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 2, பக்-76*

*5. அகநானூறு, முனைவர் இரா.செயபால், மணிமிடைப்பவளம் பா.எ.254*

*6. அகநானூறு, முனைவர் இரா.செயபால், நித்திலக்கோவை பா.எ.336,பா.வரி-5*

*7. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 2,பக்-411*

*8.மேலது -பக்-102*

*9. மேலது -பக்-102*

*10. மேலது -பக்-103*

*11. மேலது -பக்-103*

*12. அகநானூறு, முனைவர் இரா.செயபால், களிற்றியானைநிரை,பா.எ.92,வரி-11*

*13. மேலது.பா.எ-14*

*14. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 1, பக்-150.*

*15. அகநானூறு, முனைவர் இரா.செயபால், களிற்றியானைநிரை,பா.எ.258,வரி-1-3*

*16. அகநானூறு, முனைவர் இரா.செயபால், நித்திலக்கோவை பா.எ.372, பா.வரி-1082.*

*17. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 1, பக்-122*

*18. அகநானூறு, முனைவர் இரா.செயபால், மணிமிடைப்பவளம் பா.எ.126, பக்385*

*19. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 1, பக்-30*

*20. அகநானூறு, முனைவர் இரா.செயபால், மணிமிடைப்பவளம் பா.எ.149 பக்..454*

*21. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 2,பக்-35*

*22. மேலது, பாக.1. பக்-102*

*23. மேலது, பாக.1. பக் -57*

*24. அகநானூறு, முனைவர் இரா.செயபால், களிற்றியானைநிரை,பா.எ.102,வரி-1-6*

*25. மேலது, பா.எ.43. பக்.126*

*26. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 2,பக் — 475*

*27. மேலது,பாக.1.பக்-210*

*28. அகநானூறு, முனைவர் இரா.செயபால், களிற்றியானைநிரை,பா.எ.19,பக்- 54*

*29. மேலது பா.எ.48. பக்-142*

*30. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 1, பக்-166*

*31. அகநானூறு, முனைவர் இரா.செயபால், களிற்றியானைநிரை,பா.எ.44,பக்- 128*

*32. அகநானூறு, முனைவர் இரா.செயபால், நித்திலக்கோவை பா.எ.327பா.வரி-5*

*33. வீரயுக நாயகன் வேள்பாரி, சு.வெங்கடேசன், தொகு- 1, பக்-58*

**துணைநூற் பட்டியல்**

*1. சு.வெங்கடேசன், வீரயுகநாயகன் வேள்பாரி தொகுதி 1 மற்றும் 2, விகடன் பிரசுரம், 757,அண்ணா சாலை, சென்னை-600 002,நான்காம் பதிப்பு —*

*2.முனைவர் இரா.செயபால் , அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், 41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர்,சென்னை-600 098.*

## *References*

*1.Su. Venkatesan, Veerayuganayagan Velpari Volume 1 and 2,Vikatan Prasuram,757, Anna Salai, Chennai-600 002, Fourth Edition .*

*2. Dr.I. Seyapal, Akananuru Moolamum Textum, New Century Book House (P) Lit 41-B, Cidco Industrial Estate, Ambattur, Chennai-600 098.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com